இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (28.08.2025) சென்னை. புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய அன்னதானக் கூடத்தின் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார். உடன்மண்டல இணை ஆணையர் ஜ.முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாநகராட்சி உறுப்பினர் பரிதி இளம்சுருதி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் பெ.வெற்றிக்குமார் மற்றும் அறங்காவலர்கள், திருக்கோயில் செயல் அலுவலர் மா.ஆச்சி சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

ரூ. 19.89 கோடியில் - புரசைவாக்கம் - கங்காதரேசுவரர் திருக்கோயில் திருப்பணிகள்!

புதிய அன்னதானக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டி - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஆக.29- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் நேற்று (28.08.2025) சென்னை, புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய அன்னதானக் கூடத்தின் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப் பேற்ற பிறகுதான், சுமார் 900 ஆண்டுகள் பழமையான புரசைவாக்கம் கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.4.82 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 2024 நவம்பர் மாதத்தில் குடமுழுக்கு நடத்தப்பட்டது.

கடந்த நான்காண்டுகளில் இத்திருக்கோயிலுக்கு ரூ.19.89 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.81 இலட்சம் செலவில் புதிய மரத்தேர் செய்யப்பட்டு வீதி உலா வருவதோடு, அத்தேரினை பாதுகாக்க ரூ.15.40 இலட்சம் செலவில் தேர் பாதுகாப்பு கொட்டகையும் அமைக்கப்பட்டுள்ளது. உபயதாரர்கள் பங்களிப்போடு ரூ. 8 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் உருவாக்கும் பணியில் தங்கத் தேருக்கான மரத்தேர் செய்யப்பட்டு செப்பு கவசம் வேயும் பணி நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் ரூ.1.29 கோடி மதிப்பீட்டில் திருக்குளம் சீரமைக்கும் பணியும், திருக்கோயில் நிதி ரூ.18 இலட்சம் செலவில் நந்தவனம் மறுசீரமைப்பு பணியும் நிறைவு பெற்றுள்ளன. ரூ.3.12 கோடி மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுமானப் பணியினை கடந்த வாரம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இத்திருக்கோயிலில் நாள்தோறும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக ரூ.94 லட்சம் மதிப்பீட்டில் புதிய அன்னதானக் கூடம் கட்டுமான பணியினை இன்று தொடங்கி வைத்துள்ளோம். இப்பணி மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இத்திருக்கோயிலை பொறுத்த ளவில் கடந்த காலங்களில் நிலுவையில் இருந்த வாடகை மற்றும் குத்தகை தொகை முழுமையாக வசூலிக்கப்பட்டு பக்தர்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற நல்ல சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 3,452 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் மட்டும் 32 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. வரும் தை மாதத்திற்குள் 4,000 திருகோயில்களுக்கு குடமுழுக்கு காணப்படும். ரூ.131 கோடி மதிப்பீட்டில் 147 புதிய அன்னதானக் கூடங்களும், ரூ.188 கோடி மதிப்பீட்டில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகளும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு 8 கிலோ தங்கத்தை கொண்டு உருவாக்கப்பட்டு வரும் புதிய தங்கத்தேருக்கு உபயதாரர் ஒருவர் 3 கிலோ தங்கக் கட்டிகளை வழங்கியுள்ளார்.

பல்வேறு திருக்கோயில்களில் ஓடாத திருத்தேர்களை எல்லாம் ஓட்டுவித்த அரசு திராவிட மாடல் அரசாகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓடாமல் இருந்த திருவாரூர் ஆழித்தேரை ஓட்டி காட்டியதைபோல் முதலமைச்சர் அவர்கள் சாதி, மத வேறுபாட்டால் 18 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சிவகங்கை மாவட்டம், கண்டதேவி தேரோட்டத்தை நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஓட்டி காட்டினார்.

அ.தி.மு.க.வை ஆர்.எஸ்.எஸ். வழிநடத்துவதில் எந்தத் தவறுமில்லை என்று ஒன்றிய இணை அமைச்சர் முருகன் தெரிவித்த கருத்து குறித்து கேட்டீர்கள். இந்தக் கேள்வியை நீங்கள் எடப்பாடி பழனிசாமியிடம்தான் கேட்க வேண்டும். தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றம் குறித்து கேட்டீர்கள். தூங்குபவர்களை எழுப்பி விடலாம், தூங்குவதைப் போல் நடிப்பவர்களை எழுப்பவே முடியாது. அரசின் சார்பில் முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கின்ற மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் அதற்கான விரிவான விளக்கத்தை அளிப்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாநகராட்சி உறுப்பினர் பரிதி இளம்சுருதி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் பெ. வெற்றிக்குமார் மற்றும் அறங்காவலர்கள் ரா. உதயகுமார், பி.ரத்தினம், திருமதி நா.லீலாவதி, திருக்கோயில் செயல் அலுவலர் மா.ஆச்சி சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க முன்னணித் தலைவர் களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரும், தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான அன்பில் பொய்யாமொழி அவர்களின் 26-ஆம் ஆண்டு நினைவு தினம், திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், நடைபெற்றது. அங்கு வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், சபியுல்லா, பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - எஸ்.மோகன் - தி.மு.தனியரசு பங்கேற்பு!

13வது வட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

கேபிள் டிவி எம்.ராஜா அறிக்கை!

சென்னை, ஆக. 29- தமிழ்நாடு முழுவதும் தற்போது உங்களுடன் ஸ்டாலின் முகாம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டுள்ளதையொட்டி, இன்று (29.8.2025 வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில் டோல்கேட் எம்.ஜி.ஆர் சாலை மெயின் ரோட்டில் அமைந்துள்ள ரேவூர் பத்மநாபா சிபிஎஸ்இ மேல்நிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறுகிறது. இதில் கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு 13வது வட்ட கழக செயலாளர் கேபிள் டிவி எம்.ராஜா தெரிவித்துக் கொள்கிறார்.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் தி.நகர் எஸ்.மோகன், திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர், கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

ஆகையால் இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாக-முகவர்கள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 13வது வட்ட கழக செயலாளர் கேபிள் டிவி எம்.ராஜா கேட்டுகொண்டுள்ளார்.

திருவல்லிக்கேணி முன்னாள் பகுதிச் செயலாளர்

க.வே.செழியன் 3-ஆம் நினைவு நாள் - தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

க.வே.மோகன் ஏற்பாட்டில் நே.சிற்றரசு வழங்குகிறார்!

சென்னை, ஆக.29- சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் பொதுக்குழு உறுப்பினருமான க.வே.செழியன் அவர்களின் 3-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி 3,000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நாளை 31.8.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் பூரம் பிரகாசம் தெரு இராயப்பேட்டையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் மறைந்த க.வே. செழியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., பகுதி கழக செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், வே.கமலா செழியன் எம்.சி. ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் டாக்டர் வே.பூங்கொடி, டாக்டர் செல்வராஜ் சின்னசாமி உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை 119வது வட்டக் கழக செயலாளர் க.வே.மோகன் செய்துள்ளார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் உணவு வழங்குகிறார்!

132 -வது வட்ட முன்னாள் செயலாளர் கோ.மதிவாணன் நினைவு நாள்!

மு.மகேஷ்குமார் - பிரபாகரராஜா - எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, ஆக. 29 - சைதை மேற்கு பகுதி 139 வது வட்ட முன்னாள் செயலாளர். சைதை .கோ. மதிவாணன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி மற்றும் ☙ வழங்கும் நிகழ்ச்சி இன்று (29.8.2025 வெள்ளிக்கிழமை) மதியம் 12 மணியளவில் மாவட்ட செயலாளர். அமைச்சர்.மா.சுப்பிரமணியன் அன்னதானம் வழங்குகிறார்.

.நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இராதுரைராஜ் எம்.சி., வழக்கறிஞர்.எம்.ஸ்ரீதரன் எம்.சி., மா.அன்பரசன், களக்காடி.எல்லப்பன், எம்.எஸ்.ஹரிபாபு, வி.பி. ஜானகிராமன், வட்டச் செயலாளர்கள் அட்கோ. கமலநாதன், சை.மு.சேகர், கழக பேச்சாளர் சைதை சாதிக் முன்னிலை வகிக்கின்றனர்.

துணை மேயர் மு. மகேஷ்குமார், ஏ.எம். வி.பிரபாகர்ராஜா எம்.எல்ஏ. , எஸ். குணசேகரன், மின்னல் கந்தப்பன், தா. மோகன்கு மார், ப. சுப்பிரமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், ஆர்.கிருஷ்ணகுமார், ந.தமிழரசு, எஸ். பி.கோதண்டம், எம். நாகா, ஜி.கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன்,டி. என்.சிவமணி, த.மணி, கு. புகழ் வேந்தன், சைதை. ஆர்.ரவி,பொன்.ஜெய்சிங், பால்கார் ரவி, சைதை. ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன்,மு.கதிரவன், பொ. பரத் குமார்,பி.எஸ்.முருகன், எஸ்ஃசாந்தி சுந்தரம், மு.காளியப்பன். மற்றும் பலர் பங்கேற்கின்றனர்

நிகழ்ச்சி ஏற்பாடு சைதை ம.திலீபன்மதிவாணன் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியம் கீழ் அத்திவாக்கம் ஊராட்சியில் கீழ் அத்திவாக்கம் , பொற்பனங்கரனை , பாபுராயன்பேட்டை ஊராட்சி மக்களுக்கு 'உங்களுடன் ஸ்டாலின் ' முகாமை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவங்கி வைத்து மனுக்கள் பெற்றார். இந்நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஒரத்தி கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன், செந்தில்குமார், ஒன்றியகுழு உறுப்பினர் சாரதி ,கீழ் அத்திவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பச்சையம்மாள் கோவிந்தசாமி, மத்திய ஒன்றிய செயலாளர் கோகுல கண்ணன், இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து நிகழ்ச்சி துவங்கி நடைபெற்று வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்.

வில்வித்தைப் போட்டியில் தங்கப் பதக்கம் :

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. வாழ்த்து!

விழுப்புரம், ஆக. 29 - விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணனை வானூர் சட்டமன்ற தொகுதி, கிளியனூர் ஊராட்சியைச் சேர்ந்த விழுப்புரம் மத்திய மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் வேலுஜி மகள் வி.கவிப்பிரியா தேசிய அளவில் நடைபெற்ற வில்வித்தை போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதையொட்டி, சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இதில் ஒன்றிய கழக செயலாளர் ச.புஷ்பராஜ், ஊராட்சி மன்ற தலைவர் வீரப்பன், பிரவீன் குமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஆழ்ந்த இரங்கல்

மேனாள் நகர மன்ற தலைவர்
மாவட்ட கழக பொருளாளர் - தி.மு.க
இரா.ஜனகராஜ் B.Sc.,
அவர்களின் தந்தை

T.இராஜாமணி அவர்கள்

நேற்று 28.08.2025 வியாழக்கிழமை மாலை 7.00 மணியளவில் இயற்கை எய்தினார்.
அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று 29.08.2025 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் அவர்களது இல்லம் (அம்மச்சார் அம்மன் கோயில் தெரு மந்தக்கரை) நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒருத்தமுடன்

முனைவர் க.பொன்முடி M.A.,Ph.D.,B.L.,MLA.,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் - திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர்

டாக்டர் பொன்.கௌதமசிகாமணி MS.(Ortho) Ex.MP
விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்

டாக்டர் இரா.இலட்சுமணன் M.B.B.S.D.Ortho.,MLA.,
விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர்

இரா.சக்கரை
நகர கழக செயலாளர்

இரா.ச.தமிழ்ச்செல்விபிரபு MBA.,
நகர மன்ற தலைவர்

விழுப்புரம் நகர தி.மு.க - மேற்கு